**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.59/2024**

**PW.2**

**Date: 03.11.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ரூபினி | வயது | 36 |
| கணவர்/தந்தை பெயர் | வெங்கடேசன் | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **03th day of November 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை;</u>**

2. நடந்த சம்பவம் அனைத்தும் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் சரிதான். நடந்த சம்பவங்கள் ஏதேனும் சாட்சியத்தில் நான் சொல்லாமல் விட்டு விட்டேனா என்றால் இல்லை. நானும் என்னுடைய பு.சா.1 ம் எதிரிகளின் நிறுவனத்தில் காரை பார்ப்பதற்கு மெக்கானிக்கை அழைத்துச் சென்று சோதனை செய்தோமா என்றால் அழைத்துச் சென்று சோதனை செய்தோம். மெக்கானிக் அந்த காரை பார்த்த பிறகு அந்த காரை வாங்கலாம் என சொன்ன பிறகுதான் நாங்கள் ரூபாய் 20000 முன்பணமாக கொடுத்தோம் என்றால் இல்லை. அவர்கள் சோதித்துப் பார்த்த பிறகு அதிலிருந்து குறைகளை சொன்னார்கள். அதனை எதிரிகள் சரி செய்து தருவதாக சொன்னதன் பேரில்தான் நாங்கள் முன்பணம் ரூபாய் 20000 கொடுத்தோம்.

3. ஒன்றாம் எதிரி அந்த காரின் பதிவு எண்ணிற்கு பதிலாக வேறு பதிவு எண் வரும் என்று சொன்னாரா என்றால் இல்லை. ஒரு மாதம் கழித்து பதிவு சான்றிதழ் கிடைக்கும் என்று தான் அவர் சொன்னார். 1 ஆம் எதிரி அந்த காரின் பழைய பதிவை எண்ணிற்கு பதிலாக புதிய பதிவு எண் கிடைக்கும் என்று ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றாலும் அதில் பு.சா.1 கையொப்பம் செய்துள்ளார் என்றால் பு.சா.1 ற்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. முன்பணம் கொடுத்ததற்காகவும் ஒரு மாதம் கழித்து பதிவு சான்றிதழ் கிடைக்கும் என்று சொன்னதற்காகவும் தான் பு.சா.1 கையொப்பம் செய்தார் எதிரிகள் அதை எங்களிடம் படித்து காண்பிக்கவில்லை. அதன்பிறகு புகார்தாரர் அவரது மனைவியின் நகைகளை அடகு வைத்து காருக்காக பணத்தை எதிரிகளின் வங்கி கணக்கிற்கு அனுப்பி விட்டார் என்றால் சரிதான்.

4. முழு பணத்தையும் கொடுத்த பிறகு நாங்கள் அந்த வண்டியை டெலிவரி எடுத்தோம் என்றாலும் அப்போது மெக்கானிக் உடன் இருந்தார் என்றால் முழு பணத்தையும் கொடுத்த பிறகு தான் டெலிவரி எடுத்தோம். மெக்கானிக் அப்போது உடன் வரவில்லை. எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் புகார்தாரர் காரை டெஸ்ட் டிரைவ் செய்து youtube ல் ரிவ்யூ வீடியோ பதிவிட்டார் என்றாலும் அதில் அவருக்கு முழு மன நிறைவு உள்ளதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். காரை டெலிவரி எடுத்த அன்றைய தினமே வீடியோ பதிவிட்டார். அன்றைய தினமே அந்த கார் விபத்திற்கு

உள்ளானது என்றால் இல்லை. மூன்று நாட்கள் கழித்து தான் ஆனது. நாங்கள் 2 ஆம் எதிரியை அணுகி காரை சரி செய்து கொடுக்கும்படி கேட்டோம் என்றால் சரிதான். அவர் அங்கேயே அதை சரி செய்து கொள்ளும்படி சொன்னார் என்றாலும் நாங்கள்தான் காரை வெளியில் கொண்டு சென்றோம் என்றால் இல்லை. அவர் சொன்ன மெக்கானிக் ஷட்டிற்கு தான் காரை கொண்டு சென்று பழுது பார்த்தோம்.

5. நகைகளை அடகு வைத்து காரை வாங்கியது சம்பந்தமாக அவருக்கும் அவருடைய மனைவிக்கும் இடையே தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். எனவே புகார்தாரர் காரை எதிரிகளிடம் திருப்பி கொடுத்துவிட்டு அந்த தொகையை திருப்பி வாங்குவதற்காக தான் காரை எதிரியிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்தஅந்த காரில் பல குறைபாடுகள் இருந்ததால் அதை எதிரிகள் சரிசெய்து கொடுப்பாதாக சொன்னாகள்.ஆனால் சொன்னபடி சரி செய்து கொடுக்காததால் தான் புகார்தாரர் காரை எதிரிகளிடம் திருப்பி கொடுத்தார். புகார்தாரர் தன்னுடைய அவசர தேவைக்காக அந்த காரை விற்பனை செய்வதாக கடந்த 26/07/2023 அன்று கடிதம் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் அதற்காக கடிதம் எழுதிக் கொடுக்கவில்லை. காரில் பழுது இருந்ததால் அதை சரி செய்து தரும்படி எதிரிகளிடம் முறையிட்டும் அவர்கள் சரி செய்து கொடுக்காததால்தான் காரை திருப்பிக் கொடுப்பதாக புகார்தாரர் சொன்னார்.

6. புகார்தாரர் காரை விற்பனை செய்து கொடுக்கும்படி எதிரிகளிடம் கொடுத்ததால் தான் திருவல்லிக்கேணியில் உள்ள அவர்களின் ஷோரூமில் அதை விற்பனைக்காக நிறுத்தி வைத்தார்கள் என்றால் இல்லை. காரை காணவில்லை என்று நாங்கள் ராயப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. ராயப்பேட்டை போலீசார் எதிரிகளுக்கு போன் செய்து கார் எங்கே உள்ளது என்று விசாரணை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காரை நாங்கள் எங்கு சென்று கொண்டு வந்தோம் என்றால் நாங்கள் கொண்டு வரவே இல்லை. காரை நாங்கள் எங்கு சென்று கொண்டு வந்தோம் என்றால் நாங்கள் கொண்டு வரவே இல்லை. எதிரிகள் தான் கேளம்பாக்கம் காவல் நிலையத்திற்கு காரை கொண்டு வந்து காண்பித்தார்கள். ராயப்பேட்டை காவல் நிலையத்தில் இருந்து காரை மீண்டும் பெற்றுக் கொண்டு அதன் பிறகு ஒன்றாம் எதிரியின் வீட்டுக்கு சென்று காரை விற்று தரும்படி கேட்டோம் என்றால் இல்லை. காரை திரும்ப பெற்றுக் கொண்டு பணத்தை தரும்படி தான் கேட்டோம்.

7. ஒன்றாம் எதிரியின் வீட்டிற்கு எத்தனை பேர் சென்றோம் என்றால் ஒரு ஆட்டோவில் நானும் புகார்தாரர் தான் சென்றோம். எதிரிகளிடம் விற்பனைக்காக பார்க்கிங் புகார்தாரர் கொடுத்தார் என்றாலும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். அப்போது காரை கொடுத்துவிட்டு ஏன் இன்னும் காரை விற்கவில்லை என்று கேட்பதற்காக தான் ஒன்றாம் எதிரில் வீட்டுக்கு சென்றோம் என்றால் சரிதான். காரை

விற்கவில்லை என்றாலும் பரவாயில்லை, காருக்கான பணத்தை கொடுங்கள் என்று தான் ஒன்றாம் எதிரியிடம் கேட்டோம் என்றால் சரிதான். 1 ஆம் எதிரியின் வீட்டில் உள்ளவர்கள் அதனால் பயந்து விட்டார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் காரை மீட்டு தரும்படி புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். எதிரிகள் காரின் பதிவு சான்றிதழை காவல் நிலையத்தில் சமர்ப்பித்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. காரை கொண்டு வந்தார்கள் நான் பார்த்தேன்.

8. காவல் நிலையத்தில் வண்டியை கொண்டு வந்த போது அதன் பதிவு எண் மாறி இருந்தது. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இந்த தனிநபர் வழக்கு பொய்ப் புகார் என்றால் சரியல்ல. எதிரிகள் காவல் நிலையத்தில் காரை ஒப்படைத்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். காவல் நிலையத்தில் தான் அந்த கார் இருக்குமென்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் காருகான ஆவணங்களை கொடுத்த விவரங்களை எங்களிடம் சொன்னார்களா என்றால் இல்லை. காரின் பதிவு எண் மட்டும் மாறி இருந்தது அது குறித்து மட்டும் நாங்கள் போலீசாரிடம் கேட்டோம்.

**வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d- K.Nilavarasan, 03.11.2025

District Munsif cum Judicial Magistrate,

Thiruporur.